த. நா.ச.பே. எண் : 002 நாள் :04.12.2014

பால் விலையேற்றம் குறித்து இன்று (4.12.2014) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆவின் நிறுவனம் லாப நோக்கம் இன்றி செயல்பட்டு, பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்கள் நலனைப் பாதுகாக்கும் ஒரு கூட்டுறவு நிறுவனமாகும். பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் பால் கொள்முதல் விலையை வழங்கியும், பால் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்தும், பால் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கிடையே ஒரு பாலமாக செயல்பட்டு, அவர்களது நன்மைக்காக பணியாற்றி வருகிறது.

ஆவின் நிறுவனம், நாளொன்றுக்கு 22 லட்சம் லிட்டர் பால் மற்றும் வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் போன்ற பால் உபபொருட்களை விற்பனை செய்து வருகிறது. நுகர்வோர்க்கு இதனைக் குறைவின்றி வழங்க, ஆவின் நிறுவனத்திற்கு தினசரி சராசரியாக 23 லட்சம் லிட்டர் பால் தேவைப்படுகிறது.

ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பால் கொள்முதல் விலையானது, கேரளா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் செயல்பட்டுவரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையங்கள், மற்றும் தமிழகத்தில் செயல்பட்டு வரும், தனியார் பால்பண்ணைகள் ஆகியவற்றின் கொள்முதல் விலையைவிட குறைவானதாக இருந்து வந்ததால், ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதல் அளவு படிப்படியாகக் குறைந்து, அக்டோபர் 2014–ல் 20.70 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கு குறைந்தது.

இவ்வாறு பால் கொள்முதல் அளவு குறைந்த நிலையிலும், ஆவின் நிறுவனம், வெளிமாநில கூட்டுறவு இணையங்களிலிருந்து பால்பவுடர் மற்றும் வெண்ணெய் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, நுகர்வோர்க்கு தொடர்ந்து குறைவின்றி வழங்கி வந்தது. இதன் காரணமாக, ஆவின் நிறுவனத்தின் நிதி வெகுவாகக் குறைந்து, பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப் பட்டுவாடா தாமதமாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

கால்நடைத் தீவனம், பசுந்தீவனம் ஆகியவற்றின் விலை உயர்வாலும், பணியாளர்கள் செலவு அதிகரித்ததன் காரணமாகவும், கால்நடைகளின் பராமரிப்பு செலவு அதிகரித்து, பால்

உற்பத்தியாளர்களுக்குப் போதிய வருமானம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில், ஆவின் நிறுவனத்துக்குப் பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது தமிழக அரசின் கடமை ஆகும். எனவே, ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாயும், எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயும் 1.11.2014 முதல் உயர்த்தப்பட்டது.

இவ்வாறு பால் கொள்முதல் விலை உயர்த்தப்படாமல் இருந்திருந்தால், பால் உற்பத்தி குறைந்து ஒன்றியத்தின் நிதிநிலை பாதிக்கப்பட்டு, பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பணம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கும். மேலும், இது தொடர்பான பணியினைச் செய்து வரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த சுமார் 19,000 பணியாளர்கள், ஒன்றியம் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து வரும் சுமார் 6,000 பணியாளர்கள், ஆக மொத்தம் 25,000 பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டிருக்கும். இந்தக் கொள்முதல் விலை உயர்வின் காரணத்தால், பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பால் கொள்முதல் தொகை, ஆண்டிற்கு சுமார் 456 கோடி ரூபாய் அதிகரித்து, ஆண்டு ஒன்றுக்கு 2550 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து, கிராமங்களில் உள்ள பால் உற்பத்தி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்றமுறை 1.1.2014 அன்று பால் கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி வழங்கியபோதும், பால் விற்பனை விலையினை தமிழக அரசு உயர்த்தவில்லை. இவ்வகையில் இணையத்திற்கு ஏற்படும் நிதியிழப்பினை ஈடு செய்ய தமிழக அரசு 76 கோடியே 29 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பாலில் 49 சதவீதம் வரை கொள்முதல் செய்து வரும் அமைப்பு சாராத நிறுவனங்கள், பாலினை பதப்படுத்தாமல், அதற்கான செலவுகள் ஏதும் இன்றி, லிட்டர் ஒன்றுக்கு 35 ரூபாய் வரை விற்பனை செய்து வருகின்றன. ஆவின் நிறுவனமோ கிராமங்களில் இருந்து பால் கொள்முதல் செய்து, அதன் ஆரம்ப தரத்தினை பாதுகாக்கும் வகையில், கிராம அளவில் மொத்த பால் குளிர்விப்பான்கள் ஏற்படுத்தியும், குளிரூட்டும் நிலையங்கள் ஏற்படுத்தியும், கொள்முதல் செய்யப்படுகின்ற பாலினை உடனடியாக குளிர்பதனம் செய்து, அருகில் உள்ள பால் பண்ணைகளில் பதப்படுத்தி, பாஸ்டுரைசேஷன் – Pasteurization என்ற தொழில்நுட்பத்தின் மூலம் நுண்ணுயிர்களை அழித்து, சுகாதாரமான பாலினை விற்பனை செய்து வருகிறது. இவ்வாறு பாலினைப் பதப்படுத்துவதற்குப் பல்வேறு செலவுகள் மேற்கொண்ட பின்னரும், நுகர்வோர் நலன் கருதி லிட்டர் ஒன்றுக்கு சமன்படுத்திய பால் 34 ரூபாய் என்ற விலையிலேயே ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

பால் விற்பனை விலை உயர்த்தப்பட்ட பின்னரும், ஆவின் நிறுவனத்தின் தற்போதைய விலை, பிற தனியார் பால் நிறுவனங்கள் மற்றும் இதர மாநிலங்களின் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் பால் விற்பனை விலையைவிடக் குறைவானதாகும்.

ஜெர்சி நிறுவனம், சமன்படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு 40 ரூபாய் எனவும், ஆரோக்யா, ஹெறிடேஜ், டோட்லா நிறுவனங்கள் லிட்டர் ஒன்றுக்கு 42 ரூபாய் எனவும், திருமலா நிறுவனம் லிட்டர் ஒன்றுக்கு 44 ரூபாய் எனவும் விற்பனை செய்கிறது. அண்டை மாநிலங்களிலுள்ள கேரளா கூட்டுறவு இணையம் மற்றும் ஆந்திரா கூட்டுறவு இணையம் ஆகியவை சமன்படுத்திய பாலை லிட்டர் ஒன்றுக்கு 38 ரூபாய் என விற்பனை செய்கின்றன. அதே போல், குஜராத் கூட்டுறவு இணையமான அமுல் நிறுவனமும் லிட்டர் ஒன்றுக்கு 38 ரூபாய் என்ற விலையில் பாலை விற்பனை செய்கிறது.

ஆவின் பால் விற்பனை விலையில் 80 சதவீதம் வரை பால் உற்பத்தியாளர்களுக்கே ஆவின் வழங்கி வருகிறது. எஞ்சிய தொகை பாலை பதப்படுத்துவதற்கும், போக்குவரத்துச் செலவுக்கும், பணியாளர்கள் ஊதியத்திற்கும் செலவு செய்யப்படுகிறது.

பால் கொள்முதல் விலை உயர்வு காரணமாக, பால் உற்பத்தியாளர்கள் ஆவின் கூட்டுறவு நிறுவனத்திற்கு பால் வழங்குவது அதிகரித்துள்ளது. அக்டோபர் 2014ல் நாளொன்றுக்கு 20 லட்சத்து 70 ஆயிரம் லிட்டர் என்ற அளவில் இருந்த பால் கொள்முதல், தற்போது 25 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. நுகர்வோர்களுக்கு தட்டுப்பாடின்றி பால் கிடைக்க இது வழி வகுத்துள்ளது. ஆவின் பாலிற்கான தேவை தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. பால் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் அரசின் நடவடிக்கையால் நன்மை அடைந்துள்ளதால் தான் இது சாத்தியம் ஆகி உள்ளது.

மேலும், பால் கொள்முதல் அதிகரித்ததால், நெய் மற்றும் வெண்ணெய் ஆகிய பால் பொருட்கள் மற்றும் மாதாந்திர பால் அட்டைகள் வழங்குவதில் கடைபிடிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு நுகர்வோரின் தேவைக்கேற்ப அவை வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, உபரி வருவாயினை ஈட்டி வந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 60 பைசா முதல் ஒரு ரூபாய் 50 பைசா வரை, கடந்த மூன்று ஆண்டுகளில் 151 கோடி ரூபாய் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி வந்த நிலை, தொடர்ந்து நீடிக்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு கிடைத்து வரும் உபரி வருவாயைக் கொண்டு, பால் கொள்முதல் பணிக்குத் தேவைப்படும் பால் பதப்படுத்தும் இயந்திரம், பால் சேமிக்கும் கொள்கலன்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், தொழிற்சாலையினை

நவீனப்படுத்துவதற்கும் ஒரு உகந்த சூழ்நிலை தற்பொழுது உருவாகி இருப்பது பால் உற்பத்தியாளர்களை பெரிதும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சென்னையில் 11.40 லட்சம் லிட்டர் பாலும், தமிழகம் முழுவதும் 10 லட்சம் லிட்டர் பாலும் விற்பனை செய்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்தப் பாலின் அளவு, ஒரு கோடியே 87 லட்சம் லிட்டர் ஆகும். இதில் பால் உற்பத்தியாளர்கள் தமது சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தும் பால் மற்றும் உள்ளூரிலேயே விற்பனை செய்யும் பாலின் அளவு, ஒரு கோடியே 14 லட்சம் லிட்டர் ஆகும். எஞ்சிய 73 லட்சம் லிட்டர் பாலில் ஆவின் மற்றும் அதன் கீழ் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்வது 30 லட்சம் லிட்டர் தான்.

தமிழகத்தில் தனியார் பால் நிறுவனங்களால் விற்பனை செய்யப்படும் பாலின் அளவு, 43 லட்சம் லிட்டர் ஆகும். தற்போது 'ஆவின்' பால் விற்பனை விலை உயர்த்தப்பட்டதற்கு கண்டனம் தெரிவிப்பவர்களைப் பார்த்து நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். தனியார் பால் நிறுவனங்கள் விற்பனை விலையை உயர்த்திய போதெல்லாம், அவர்கள் ஏன் எந்தவிதமான கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை? 'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடமா?' இல்லை, ஆவின் நிறுவனத்திற்குப் போதிய பால் கிடைக்காமல் இந்த நிறுவனம் மூடப்பட்டு, தனியாரின் ஏகபோகத்தில் பால் விற்பனை இருக்க வேண்டுமென்று இவர்கள் கருதுகிறார்களா? அல்லது விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை வழங்கப்படக் கூடாது எனக் கருதுகிறார்களா? என்று தெரியவில்லை.

இதையெல்லாம் மறைக்கும் விதமாகத் தான், ஆவின் நிறுவனத்தில் முறைகேடுகள் உள்ளன என்றும் அந்த முறைகேடுகள் களையப்பட்டாலே பால் விலை உயர்த்தப்பட வேண்டியதில்லை எனவும் ஒரு உண்மைக்கு மாறான பிரச்சாரத்தையும் சிலர் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தங்களது வாதத்திற்கு வலு சேர்க்கும் விதமாக கூறுவது, அண்மையில் ஒரு போக்குவரத்து ஒப்பந்தக்காரர் வாகனத்திலிருந்த பாலினை திருடச்செய்து, தண்ணீரைக் கலந்தது பற்றியது ஆகும். 25 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யும் ஆவின் நிறுவனத்தில், ஒரு இடத்தில் நிகழ்ந்த இந்த திருட்டு தடுக்கப்பட்டிருந்தால், பால் விலையை ஏற்றப்பட வேண்டி இருந்திருக்காது என்று சிலர் கூறுவது அறிவார்ந்த வாதம் இல்லை. பால் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக வழக்கு பதியப்பட்டு, CB CID மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 23 நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரும்

காலத்தில் இது போன்ற முறைகேடுகள் நடைபெறாத வண்ணம் தடுப்பதற்கான பல புதிய நடைமுறைகளை ஆவின் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில், பால் உற்பத்தியாளர்கள் போராட்டங்கள் மூலமே கொள்முதல் விலை உயர்வைப் பெற முடிந்தது. அப்படி பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று கோரிய பால் உற்பத்தியாளர்களை பார்த்து திரு.கருணாநிதியும், இதர தி.மு.க.வினரும் இழித்தும், பழித்தும் பேசியுள்ளனர். பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி உற்பத்தியாளர்கள் கடந்த **2009** ஆம் ஆண்டு ஜுலை மாதம் போராட்டம் நடத்திய போது, சட்டமன்றப் பேரவையில் அது குறித்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பதில் அளித்து பேசிய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் திரு.கருணாநிதி,

“இப்பொழுது இங்கே பேசிய உறுப்பினர்கள், ‘அப்பாலும்’ பேசினார்கள்; ‘இப்பாலும்’ பேசினார்கள். ‘அப்பால்’ என்றால் அவர்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்றும் பேசினார்கள். அதே நேரத்தில், consumers, பயனாளிகளும் அதிக விலை கொடுத்து பால் வாங்காமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பேசினார்கள். இப்படி ‘அப்பாலும்’, ‘இப்பாலும்’ பேசியவர்களுக்கிடையில் நான் ‘எப்பால்’ நின்று கொண்டு பதில் சொல்வதென்று எனக்கும் புரியவில்லை” என்றெல்லாம் கூறி, பால் உற்பத்தியாளர்களை மிரட்டும் விதமாக, “நாங்கள் ரத்தத்தை கண்டே பயப்படாதவர்கள், பாலைக் கண்டா பயப்படப்போகிறோம் …” என்று சொல்லியுள்ளார்.

ஆவின் நிறுவனத்திற்கு மானியம் பற்றி சட்டப்பேரவையில் பேசிய திரு.கருணாநிதி, “31.3.2009 அன்று, இந்த இணையத்தினுடைய குவிந்த நட்டம் **125.35** கோடி ரூபாய். **17** மாவட்ட பால் உற்பத்தியாளர்களுடைய கூட்டுறவு சங்கங்களின் குவிந்த நட்டம் **208.10** கோடி ரூபாய். ஆக மொத்தம் **333.45** கோடி ரூபாய் ஆவின் நிறுவனம் குவிந்த நட்டம் அடைந்துள்ளது. இதிலே மானியம் வேறு கொடுத்தால், என்ன ஆவது **?** எனவே தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்” என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த அடிப்படையில் தான் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் **1.9.2009** முதல் பால் கொள்முதல் விலை **2** ரூபாய் உயர்த்தப்பட்டு விற்பனை விலையும் **2** ரூபாய் உயர்த்தப்பட்டது. **2010** - ஆம் ஆண்டு பால் கொள்முதல் விலை உயர்த்தக் கோரி போராடிய விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட போது, ஆவின் விற்பனை விலையும் உயர்த்தப்பட்டது. தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், 5.1.2011 அன்று கொள்முதல் விலை ஒரு ரூபாய் 10 காசு, 16.2.2011 அன்று ஒரு ரூபாய் 36 காசு உயர்த்தப்பட்டது. அப்போது ஆவின் பால் விற்பனை விலை ஏற்றப்படவில்லை என்பது உண்மை தான். ஏனெனில், விரைவில் நடைபெற இருந்த சட்டமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு அப்போது மட்டும் விற்பனை விலையை உயர்த்தவில்லை. ஆனால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதன் காரணமாக ஆவின் நிறுவனத்திற்கு மாதமொன்றுக்கு 16 கோடியே 55 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. பால் விற்பனை விலையை 2011 ஆம் ஆண்டு ஏற்றவில்லை என்று கூறிக் கொள்ளும் திரு.கருணாநிதி, அப்படியென்றால், ஆவின் நிறுவனத்திற்கு அரசிலிருந்து மானியம் வழங்கியிருக்க வேண்டாமா? அவர்கள் ஆட்சியை விட்டுச் சென்ற 2011 ம் ஆண்டு மே மாதம் வரையிலான காலத்திற்கு 58 கோடியே 78 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, 17 கோடியே 41 லட்சம் ரூபாயை மட்டும் கடனாக வழங்கியது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், நவம்பர் மாதம் வரை ஆவின் நிறுவனத்திற்கு 115 கோடியே 85 லட்சம் ரூபாயை வழங்கினார்கள்.

பால் விலை உயர்வைக் கண்டிக்கும் அரசியல் கட்சியினர், இதற்கு ஒரு சாத்தியமற்ற தீர்வைத் தெரிவிக்கின்றனர். அதாவது, விவசாயிகளுக்குக் கொள்முதல் விலை உயர்த்தப்பட வேண்டும்; அதே நேரத்தில் பாலின் விற்பனை விலை உயர்த்தப்படக் கூடாது எனத் தெரிவிக்கின்றார்கள். அரசே அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார்கள். ஏழை, எளிய மக்களுக்கு அரசு மானியம் வழங்கப்படலாம். வசதி படைத்தோருக்கு வழங்க இயலாது. தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளியோரின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல் படுத்தி, சலுகைகளையும், மானியங்களையும் உதவிகளையும் வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அந்த சலுகைகளையும், மானியங்களையும் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசி விலையின்றி வழங்கப்படுகிறது. பருப்பு, எண்ணெய் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன. ஏழை, எளிய மக்களுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் விலையின்றி வழங்கப்படுகின்றன. தொகுப்பு வீடுகள் திட்டம், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஏழை எளியோருக்கு வீடுகள் வழங்கப்படுகின்றன. ‘அம்மா உணவகங்கள்’ ஏழை எளியோரின் பசி தீர்க்கும் அட்சயப்

பாத்திரங்களாக விளங்குகின்றன. இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை எடுத்துக் கூற இயலும். ஆனால், ஆவின் பால் விற்பனையில் அவ்வாறு ஏழை, எளியோர், வசதி படைத்தோர் என பிரிக்க இயலாது. எனவே தான், பால் விலை உயர்வால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினால், ஆவின் பால் விலை இன்றைக்கும் தனியார் பால் விற்பனை விலையை விட குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஆவின் பால் வசதி படைத்தவர்களாலும் வாங்கப்படுவதற்கு ஒரு சில உதாரணங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

திரு.கருணாநிதி வீட்டில் நாளொன்றுக்கு 3 லிட்டர் ஆவின் பால் வாங்கப்படுகிறது; தி.மு.க. சட்டமன்றக் குழுத் தலைவர் திரு.ஸ்டாலின் வீட்டில் 3 லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திரு.தயாநிதி மாறன் வீட்டில் 3½ லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திருமதி.செல்வி வீட்டில் 2 லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திரு.அன்புமணி ராமதாஸ் வீட்டில் 1½ லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திருமதி.தமிழிசை சவுந்தரராஜன் வீட்டில் 1 லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திரு.வை.கோ வீட்டில் 3½ லிட்டர் பால் வாங்கப்படுகிறது; திரு.ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வீட்டில் 1½ லிட்டர் பால் வாங்கப்படுகிறது; மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.சவுந்திரராசன் வீட்டில் 2 லிட்டர் பால் வாங்கப்படுகிறது; இது போன்றே வசதி படைத்தோர் பலரும் தினமும் ஆவின் பால் வாங்குகிறார்கள்; இப்படி வசதி படைத்தோருக்கெல்லாம் அரசு மானியம் வழங்க வேண்டுமா என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக் கொள்கிறேன். வசதி படைத்தோர்க்கு மானியம் வழங்கப்படுவதை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

எனவே தான், பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய கொள்முதல் விலை வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், அதே சமயத்தில் நுகர்வோருக்கான பால் விற்பனை விலை அதற்கேற்பவே உயர்த்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், தனியார் பால் விலையை விட ஆவின் பால் குறைந்த விலைக்கு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், பால் கொள்முதல் விலையும், விற்பனை விலையும் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * * * * * *

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**